# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate At Srivaikundam.

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC. | 282 | 2014 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| 1 | 1 | ராஜகுரு | |

**சாட்சியின் வகைபாடு** புகார்தாரர்

**க/பெ/தந்தையின் பெயர்**

**முகவரி:**

**Religion / Caste** : ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/BC/MBC/ SC/ST***

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரனை தேதி :-15 **October** 2018

அரசு தரப்பில் முதல் விசாரணை:

***அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டுக்கொண்டதன் பேரில் அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.***

நான் வானுபன்விளையில்வசிக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17-10-2014 ம்தேதி இரவு 09,30 மணிக்கு எங்கள் ஊர் அம்மன்கோவில் தெருவில் வைத்து நானும் எனது அம்மா பாலசுந்தரியும் பால்கனி என்பவரிடம் மகளிர் சுயஉதவிக்குழுவில் உள்ள பணத்தை கேட்டபோது பால்கனியின் கணவர் பற்குணம் என்னையும், எனது அம்மாவையும் கெட்டவார்த்தைகளால் பேசி பற்குணம் கையால் என்னை வலது கனனத்தில் அடித்தார். எதிரி மோகன் கையில் இருந்த கிரிக்கெட் கம்பால் எனத வலதுபக்க் நெற்றியில் அடித்தார். காயம்பட்ட நான் அரசுமருத்துவமனை திருச்செந்தூர் சென்றேன். அங்கிருந்து மேல்சிகிட்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனை அனுப்பினார்கள். ஏற்கனவே எனதுஅம்மாவிற்கும் பால்கனிக்கும் உள்ள சுயஉதவிக்குழு பிரச்சனையால் இந்த சம்பவம் நடந்தது. நான் சிகிட்சையில் தூத்துகுடியில் இருந்த போது போலிசார் என்னிடம் விசாரித்தார்கள் நான் நடந்த சம்பவத்திற்கு ஒருபுகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் என்னிடம் காட்டபடுவதுதான் அது அ.சா.ஆ. 1 ஆகும். போலசார் என்னைவிசாரித்தரர்கள்.

எதரிதரப்பில் குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அம்மன்கோவில் தெரு எதிரியின் வீட்டின் முன்பு, எதிரியின் வீடும் என் விடும் பக்கத்து பக்கத்து தெரு . எதிரியின் விட்டிற்கு செல்ல தெருவை கடந்துதான் செல்லவேண்டும் என்று சொன்னால் சரிதான். எதிரியின் வீட்டு முன்பு அம்மன்கோவில் உள்ளது எ ன்றால் சரிதான். எதிரியின் வீட்டுப்பக்கம நிறைய வீடுகள் இருந்ததுஎன்றால் சரிதான். நானும் என் அம்மாவும் எதிரியின் வீட்டடிற்-கு பணம்கேட்டு

சென்றோம். பக்கத்தில் உள்ள வீட்டு காரர்களுக்கு சம்பவம் தெரியும் என்றால் சரிதான். சுயுஉதவி குழுவின் பெயர் தெரியவில்லை. அந்த குழுவில் எந்தனை நபர்கள் இருந்தார்கள் யார் யார்க்கு பணம் கொடுக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தொரியாது என்றால் சரிதான். எனதுஅம்மா எதிரிக்கு கொடுக்கவேண்டிய பணம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. காயம்பட்ட பின்பு சிகிட்சைக்காக திருச்செந்தூர் அரசுமருத்துவமணைக்கு சென்றேன். பக்கத்து தெரு பசங்கள் தெய்வமணி என்பவர்ருக்கு தெரியும். நான் ஷைகண்ட விவரங்களை போலிசார் விசாரணையில் சொன்னேன்.நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள்தான் போய் எதிரியின் வீட்டில்போய் சம்பவம் நடக்க காரணமாக இருந்தோாம்என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(சாட்சியின் பெயர்)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Judicial Magistrate , Srivaikundam.
.Date : 15-10-2018

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate At Srivaikundam.

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| **CC**. | 282 | 2014 | |
| **சா.ப. எண்** | **அ.த.சா. எண்** | **சாட்சியின் பெயர்:** | **வயது** |
| 2 | 2 | **சுந்தரி** | |

**சாட்சியின் வகைபாடு** அறிவேன் சாட்சி.

**க/பெ/தந்தையின் பெயர்**

**முகவரி:**

**Religion / Caste** : ***HINDU/CRISTIAN/MUSLIM/OC/BC/MBC/SC/ST***

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரனை தேதி :-15 **October** 2018

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் வானுபன்விளையில்வசிக்கிறேன். அ.சா1 எனது மகன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இரவு 09,00 மணிக்குமகளிர் சுயஉதவிக்குழு பிரச்சனையின் முன்பகை சம்மந்தமாக அ.சா.1 னை எதிரி மோகன் கிரிக்கெட்பேட் ஸ்டெம்பால் வலதுஅபக்க நெற்றியில் அடித்தார். சம்பவத்தை நான்நேரில் பார்த்தேன். காயம்பட்ட என் மகனை நான் திருச்செந்தூர் அரசுமருத்துவமனைக்கு சிகிட்சைக்குசேர்த்தேன் அங்கிருந்து மேல்சிகிட்சைக்ாக எனது மகனை தூத்க்குடி அரசுமருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அங்குவந்த போலிசாரிடம் எனது மகன் புகார்வாக்குமூலம் அளித்தார். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டேன்.போலிசார் என்னைவிசாரித்தரர்கள்.

எதரிதரப்பில் குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அம்மன்கோவில் தெரு தெற்கு பக்கம் சம்பவஇடத்திற்கும் எதிரியின் வீட்டிற்கும் சுமார் 200 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீடும் எதிரியின் வீடும் அடுத்த அடுத்த தெருவில் உள்ளது என்றால் சரிதான். சுயுஉதவிக்குழு பெயர் தற்போது மறந்துபோய்விட்டது. குழுவில் 12 ஆயிரம் ருபாய் கட்டியிருந்தேன் ஆயிரம் ரூபாய் வாங்கியிருந்தேன். இந்த விவரத்தை நான் போலிசார் விசாரயில் கூறியிருக்கிறேன். எனது மகனை நான்தான் மருத்துவமனையில் சேர்த்தேன். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(சாட்சியின் பெயர்)

Judicial Magistrate , Srivaikundam.
.Date : 15-10-2018